## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.94** **நாள்: 09.07.2016**

**சீன நாட்டில் உள்ள சோங்கிங் நகர உள்ளாட்சி மக்கள் அமைப்பின் தலைவர் திரு. சூ ஜிங்கி, அவருடன் ஐவர் குழுவினர் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர். தா. கார்த்திகேயன் அவர்களை 08.07.2016 அன்று சந்தித்தனர்!!**

***

மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் கடந்த வருடம் 15.05.2015–ல் சீன நாட்டின் தலைநகர் பீஜிங்கில் சீன நாட்டின் பிரதமர் முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் சோங்கிங் மாநகரத்திற்கும் (Chongqing) இடையே செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக இந்திய அரசினுடைய ஒப்புதலுங்கிணங்க இன்றைய தினம் இந்த கூட்டத்தில் சோங்கிங் மாநகராட்சியில் இருந்து வந்துள்ள தலைவர், இயக்குநர்–ஜெனரல் மற்றும் துணை இயக்குநர் ஜெனரல் உள்ளிட்ட குழுவினை சேர்ந்த அதிகாரிகளை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக வரவேற்று பேசினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் குப்பை அகற்றும் பணி குறித்து செயற் பொறியாளர் அவர்கள் திரை விளக்கம் மூலம் வீடு வீடாக குப்பை அகற்றுதல், தெருக்களை பெருக்குதல், குப்பைத் தொட்டிகள், காம்பாக்டர் குப்பைத் தொட்டியில் இருந்து குப்பை அகற்றுதல் குறித்தும், தொகுப்பு குப்பைத் தொட்டிகள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் இருந்து குப்பை அகற்றும் முறை குறித்தும், இரண்டு குப்பை கொட்டும் வளாகங்களான கொடுங்கையூர் (269 ஏக்கர்) மற்றும் பெருங்குடியில் (450 ஏக்கர் தற்போது 200 ஏக்கராக உள்ளது) குப்பை கொட்டப்படுவது குறித்தும், CRRT Project குறித்தும், பயோ மெட்ரிக் மூலம் தொழிலாளர்களின் வருகைப் பதிவேடு பதிவு செய்யப்படுவதாகவும், GPS கருவி மூலம் வாகனங்கள் கண்காணிக்கப்படுவதாகவும், ஆன்லைன் மூலம் குப்பைத் தொட்டியில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் கண்காணிக்கப்படுவதாகவும், தெருக்களில் உள்ள கட்டிட இடிபாடுகள் அகற்றப்படுவதும் மேற்படி முறைகளில் கண்காணிக்கப்படுவதாக விவரித்தார்.

தலைவர், Chinese People’s Political Consultative Conference (CPPCC) Chongqing committee அவர்கள் பேசுகையில் மாண்புமிகு மேயர், ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகளை வரவேற்றப்பின்னர், சீனா நாட்டில் சோங்கிங் மாநகராட்சியில் சீனா இண்டர்நேஷனல் கான்ப்ரென்ஸ் நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ளதாகவும், அதில் மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களை கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். மேலும் சோங்கிங் மாநகராட்சி பற்றி விரிவாக விளக்கம் அளித்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள் சீனா மக்கள் குடியரசு சோங்கிங் மாநகராட்சியில் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வந்துள்ள தலைவர் மற்றும் இயக்குநர்–ஜெனரல் மற்றும் அதிகாரிகளை வரவேற்றார். 15.5.2015 அன்று இந்திய நாட்டின் பிரதமர் முன்னிலையிலும் சீனா நாட்டின் பிரதமர் முன்னிலையிலும் சகோதர நகரம் (Sister City) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் அந்த ஒப்பந்தத்திற்கு பிறகு இங்கு வருகை புரிந்து இருக்கின்ற உயர்மட்ட குழுவினரை மகிழ்ச்சியுடனும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சார்பாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாகவும் வரவேற்றார்.

நம்முடைய புரிந்துணர்வு கொள்கையின் அடிப்படையில் 5 வகையான கோரிக்கைகளை இங்கே வைத்து இருக்கின்றீர்கள். மாநகராட்சியினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு அந்த பணிகளிலும் அரசு எடுக்கவேண்டிய முடிவுகள் பற்றியும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அனைத்து கோரிக்கைகளையும் அரசினுடைய அனுமதியைப் பெற்று உங்களோடு தொடர்பு கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

தொன்மையான சோங்கிங் நகரம், தொன்மையான பெருநகர சென்னை மாநகரம் இணைந்து மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி புதிய வளர்ச்சிப் பணிகளை தொழில் நுட்பங்களையும் பரிவர்த்தனை செய்து கொள்வதில் பெருநகர சென்னை மாநகராட்சி மிகுந்த முனைப்புடன் அந்த கொள்கை முடிவினை வரவேற்கிறது என்று தெரிவித்தார்.

சென்னையில் உள்ள கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய இரண்டு குப்பை சேகரிப்பு மையங்களில், சோங்கிங் நகரத்தில் பயன்படுத்திவருகின்ற நவீனமான தொழில் நுட்பத்தை நாங்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. தாங்கள் கூறி இருக்கின்ற அந்தத் திட்டத்தை வரவேற்பதோடு, அதில் இணைந்து பணியாற்றுவதற்கு மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்புதலை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

ஒப்பந்தம் ஏற்பட்ட இந்த ஓராண்டில் தொன்மையான சோங்கிங் நகரம், தொன்மையான பெருநகர சென்னை மாநகரம் இணைந்து பல்வேறு விதமான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு இரண்டு மாநகராட்சிகள் பல்வேறு விதமான வளர்ச்சி பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற வகையில் இரு மாநகராட்சிகளும் இணைந்து பணியாற்றப்போகிறது என்பதன் அடையாளமாக தாங்கள் 09.11.2016 ல் நடைபெறும் China International Friendship Cities Conferenance - ல் கலந்து கொள்ள வாய்ப்பினை வழங்கிய அழைப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

சோங்கிங் மாநகராட்சியில் என்னென்ன அதிகார வரம்பு, மாநகராட்சியினுடைய நிர்வாகம் எப்படி செயல்படுகிறது, மாநகராட்சியினுடைய நிர்வாகத்தின்கீழ் என்னென்ன துறைகள், அதைப்போல் நிர்வாகத்தில் என்னென்ன நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துகிறீர்கள், இப்படி சிறப்பாக செயல்படுகின்ற தொழில் நுட்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கும் பரிவர்த்தனை செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைப்பற்றி எல்லாம் இங்கே விரிவாக பேசுவதற்கு நேரமின்மை காரணமாக எங்களுடைய தேவை என்ன. உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை கடிதம் மூலமாக அரசின் ஒப்புதல் பெற்று தொடர்பை வளர்த்துக் கொள்ளலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்பான திட்டங்களில் ஒன்றான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த ஏழ்மையை போக்குகின்ற, பசிப் பிணியை போக்குகின்ற சுகாதாரமான ‘‘அம்மா உணவகம்’’, ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி, 3 ரூபாய்க்கு தயிர்சாதம், 5 ரூபாய்க்கு சாம்பார் சாதம் என்ற வகையில் தினமும் 22 ரூபாயில் ஒரு நாள் முழுக்க ஒரு தொழிலாளி பசி இல்லாமல் இருக்க முடியும் என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிவித்து அதை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த திட்டத்தை உலகம் முழுக்க பாராட்டுகிறார்கள். அத்திட்டம் தங்களுக்கும் பிடிக்கும் என்று கருதுகிறேன். அப்படி பிடித்தால் நீங்கள் நம்முடைய சகோதர நகர புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் சோங்கிங் மாநகரத்திலும், இதை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

புரட்சிகரமான அம்மா உணவகம் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். ‘‘எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’’ என்ற அவர்களுடைய உயர்ந்த லட்சியத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சரை பெற்றிருக்கின்ற பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பொது உடைமை நாட்டினுடைய சோங்கிங் நகர மேயர் ஆகிய தங்களை மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வரவேற்கிறேன்.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**